அன்புள்ள ……

வணக்கம்.

பிப்ரவரி மாதம் 14 முதல் 16ம் தேதி வரை மதுரையில் பல இயக்கங்கள் ஒன்றுகூடும் [.......] என்ற நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. உங்களை அந்நிகழ்வுக்கு வரவேற்பதில் பெரிதும் மகிழ்கிறோம்.

தேசிய அளவில் விகல்ப் சங்கமம் (மாற்றுவழிகளின் கூடுகை/மாற்றுநெறிச் சங்கமம்) என்கிற பரந்துபட்ட செயல்முறையின் கீழ், வரும் ஆண்டுகளில் நடைபெறவுள்ள பல்வேறு சந்திப்புகளில் ஒன்றாக இச்சந்திப்பும் அமையும். இயற்கை, இயற்கை வளங்கள், கல்வி, மருத்துவம், கைத்தொழில்கள், ஊடகம், நீதி, வாழ்வாதாரம், வணிகம், பண்பாடு, ஆட்சித்துறை போன்ற பல துறைகளிலும் நடைமுறை மாற்றங்களைச் செயல்படுத்தும் பல்வேறு முயற்சிகளை வட்டார அளவிலும், பின்னர், தேசிய அளவிலும் ஒருங்கிணைப்பதுதான் [விகல்ப் சங்கமத்தின்] அடிப்படை நோக்கம்.

ஆக்கப்பூர்மான முறையில் நாம் ஒவ்வொரிடமிருந்தும் விவாதித்தும் கற்றுக்கொண்டும், கருத்துகளையும் கருவிகளையும் பரிமாறிக்கொண்டும், நம்பிக்கையூட்டும் கலாச்சாரங்களை கொண்டாடியும், ஓர் உறுதியான அரசியல் விசையாகச் செயல்படவும் ஒரு தளம் அமைத்துத்தரும் பணியை இந்தக் கூடுகைகள் ஆற்றும் என்று நம்புகிறோம். முதலாவது கூடுகை அக்டோபர்,2014ல் ஆந்திர பிரதேசத்தில் நடந்தது. களப்பணியாற்றும் பல அமைப்புகள் கலந்துகொண்டன. இரண்டாவதாக தமிழகத்தில் இக்கூடுகை நடைபெறவிருக்கிறது.

இப்படியான ஒரு செயல்பாடு பயனுள்ளதாகவும் பொருள்பொதிந்தாகவும் அமைய அது கூட்டாக வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்படவேண்டும். ஒத்த நோக்கோடு நீங்களும் செயல்படுவதால், இந்நிகழ்வில் நீங்கள் பங்கேற்பது பெருமதிப்புமிக்கதாக இருக்கும். இந்த நிகழ்வுக்கு உங்களை உளமாற வரவேற்கிறோம்; உங்கள் அமைப்பில் இருந்து ஒன்று அல்லது இரண்டு முக்கிய நபர்கள் வருமாறு அழைக்கிறோம். நிதிநிலைக் கட்டுப்பாடுகளின் காரணமாக, உங்கள் பயணச் செலவை எங்களால் ஏற்க இயலாது. ஆனால், நிகழ்வரங்கில் உங்களுக்குத் தங்குமிடம்தந்து விருந்தோம்பும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். நிகழ்ச்சி மதுரை அருகில் உள்ள CESCI வளாகத்தில் நடைபெறும்.

மேலதிகத் தகவல்களைப் பின்னர் அனுப்புகிறோம். தற்போது, இம்முயற்ச்சியில் தங்கள் ஆர்வத்தையும், இந்நிகழ்வில் பங்கேற்கும் சாத்தியத்தையும் அறிந்தகொள்ள விழைகிறோம். [விகல்ப் சங்கமம்] குறித்த கருத்துவிளக்கச் சிறுகுறிப்பு இந்த மடலுடன் இணைத்திருக்கிறோம். இதன் கட்டமைப்பு குறித்த விரிவான குறிப்பு பங்கேற்பாளர்களோடு பின்னர் பகிரப்படும். இக்குறிப்புகளில் முன்வைக்கப்பட்டுள்ள சிந்தனைகள் குறித்த உங்களது எண்ணங்களையும் ஆலோசனைகளையும் வரவேற்கிறோம்.

உங்கள் பதிலுக்காக ஆர்வமாகக் காத்துள்ளோம்.

நன்றி!

(இன்னும் வளர்ந்துவரும்) தேசிய மையக் குழுவின் சார்பாக : Deccan Development Society, Bhoomi College, Shikshantar, Timbaktu Collective, Development Alternatives, SOPPECOM, Gene Campaign, Centre for Equity Studies, Maati Sangathan, Bhasha, Kalpavriksh, National

Alliance of Peoples' Movements, Sushma Iyengar, URMUL, Kriti Team, Peoples' Science Institute

தமிழ்நாடு சங்கமத்தின் இணை-ஒருங்கிணைப்பாளர்கள் : ACCORD, reStore, Ritambhara, Ekta Parishad, CCD

------------------

**சிறுகுறிப்பு**

தற்போதைய வளர்ச்சி மற்றும் உலகமயமாதல் கோட்பாடுகளின் விளைவாக, உலகின் பல நாடுகளைப் போலவே, இந்தியாவும் சுற்றுச்சூழல் சிதைவு, சமூகங்களின் இடப்பெயர்ச்சி, மாபெரும் வாழ்வாதார இழப்புகள், வளர்ந்துவரும் சமூக-பொருளாதார ஏற்றதாழ்வுகள், பண்பாட்டுச் சீர்கேடு போன்றவற்றால் அவதிக்குள்ளாகியிருக்கிறது. பதற்றம், சச்சரவுகள், மோதல்கள், பெரிய அளவில் வறுமை, ஊட்டச்சத்துக் குறைபாடு, வேலைவாய்ப்பின்மை மற்றும் பல்வேறு பாதிப்புகள் மிகப் பரவலாகிவிட்டன. இத்தகைய சூழலில், தக்கவைக்கக்கூடிய சூழியலும், சமூக-பொருளாதாரச் சமநிலையும் கொண்ட உலகை உருவாக்க முனையும் பல்வேறு மாற்று முறைகளை வடிவமைக்கவும் செயல்படுத்தவும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. வளங்குன்றா வேளாண்மை, மீன்வளம், காடுகள், சமூகக் கல்வி மற்றும் மருத்துவம், உள்நாட்டுச் சந்தை மற்றும் பணியாளர்கள் கட்டுப்படுத்தும் உற்பத்தி, பல்கலாச்சார அமைதி போன்ற தளங்களில் அடிநிலை களப்பணியிலும், மேல்நிலை கொள்கைசார் செயல்பாடுகளிலும் பல முன்னெடுப்புகள் நிகழ்ந்துவருகின்றன; இவை யாவும் இயற்கைக்கும் இயற்கை நியதிகளுக்கும் மதிப்பளித்து, வட்டாரப் பண்பாடுகளைப் பேணி, வறுமை, சுரண்டல், அநீதி ஆகியவற்றை நீக்க முயல்கின்றன. பங்கேற்பினைக் கோரும் ஜனநாயகம், பொறுப்பேற்றல், வெளிப்படைத்தன்மை ஆகியவற்றிலும் ஈடுபாடு கூடிவருகிறது. இந்த முன்னெடுப்புகள் தம்மளவில் வெற்றிகரமாகச் செயல்பட்டாலும், பல காரணங்களால், ஆதிக்கக் கருத்தியல்களுக்குச் சவால்விடும் அளவிற்கு அணிதிரள முடியவில்லை.

**விகல்ப் சங்கமம்/மாற்றுவழிகளின் கூடுகை/மாற்றுநெறிச் சங்கமம் : கருத்து**

இந்தப் பின்னணியில்தான், மாற்றுமுறைகளை மொழிகின்ற மற்றும் செயல்படுத்துகின்ற மக்களின் கூடுகை வட்டார அளவில் நடைபெற முன்மொழியப்படுகின்றது. விகல்ப் சங்கமம் அல்லது மாற்றுநெறிச் சங்கமம் என்று பெயரிடப்பட்டுள்ள இச்சந்திப்புகள் பல்வேறு துறைகளில் விரவி, சூழியல், கல்வி, மருத்துவம், நீதி, ஊடகம், வாழ்வாதாரம், சந்தை/வணிகம், பண்பாடு, ஆளும்முறை மற்றும் பல்வேறு மாற்றுச்சிந்தனைகளை ஒருங்கிணைத்து, ஒவ்வொருவரிடமிருந்தும் கற்று, கூட்டாக மாற்று எதிர்காலத்தைப் பரிணமிக்கும் நீண்டகால நோக்குடன் ஒன்றுகூட உள்ளன.